"எழில் வரதன் கவிதை வெளிப்படுத்தும் பெண்ணின் ஆளுமை"

அ. ஜெரினா ராஜம்
பதிவு எண்: 241112001031, முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி), திருநெல்வேலி

நெறியாளர் முனைவர் பா. ஹெலன் சோபியா
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி), திருநெல்வேலி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கியத்தில் பெண்ணின் ஆளுமை என்பது சங்க காலம் முதல் தற்காலம் வரை கல்வி, காதல், வீரத்தியாகம் மற்றும் சமூக மாற்றத்திற்கான பரிணாம வளர்ச்சியை அடைந்துள்ளது. பெண்ணானவள் வெறும் அழகின் அடையாளமாக மட்டுமல்லாமல் அறிவு, வீரம், இல்லறம் மற்றும் சமூகப் பொறுப்புடன் கூடிய ஆளுமையில் சிறந்து விளங்குகிறாள். மகாத்மா காந்தியடிகள் சுதந்திரப் போராட்ட காலத்தில், பெண்களையும் தம்முடன் இணைந்து செயல்பட வைத்ததின் விளைவாக சத்தியாகிரக போராட்டத்தில் பெண்களும் கலந்து போராட வழி அமைந்தது. இது பெண்களின் நிலையை உயர்த்துவது மட்டுமல்லாமல் பெண்கள் விடுதலைக்கும் வித்திட்டது. சங்ககாலம் முதல் இக்காலம் வரையிலும் ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் பல வீரச் செயல்களைப் புரிந்தும், ஆடல் பாடல்களிலும், விளையாட்டுக்களிலும் தங்களின் திறமையை வெளிப்படுத்துகிறாள். இலக்கியம் தொடங்கிய காலத்தில் இருந்தே பெண்ணுரிமை பெண் விடுதலை பேசப்பட்டாலும் நவீன இலக்கியத்திலேயே முதன்மைப்படுத்தப் பெற்றது. பெண்ணியச் சிந்தனையும் பெண் சமத்துவமும் முக்கியமாய் கவிதைகளில் கையாளப்பட்டன. ஆனால், இதுவரை தமிழ்க் கவிதை பாடாத சிலவற்றை எளிய வார்த்தையில் "யாது நான் இங்கு" என்ற கவிதைத் தொகுப்பின் வாயிலாக உளவியல் நோக்கில் பெண்ணின் ஆளுமையைப் பதிவு செய்வதை இவ்வியல் ஆராய்கிறது.

முன்னுரை

மனிதன் தன் வாழ்நாளின் ஒவ்வொரு கட்டங்களிலும் பின்பற்றி நடக்க வேண்டிய கூறுகளை, தலைமைப் பண்புகளை எடுத்துக் கூறுவதோடு, சாதி, மத வேறுபாடுகளைக் கடந்து மனிதன் மனிதனாக வாழவும், மனிதன் சக மனிதனை மதிக்கவும், மனிதகுல வளர்ச்சிக்கும், மலர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்கும் மனித மாண்புகளை உருவாக்கும் ஆளுமைச் சிந்தனைகளை நவீன இலக்கியங்கள் தன்னுள் கொண்டு விளக்குகிறது. தன்னம்பிக்கை, காதல், வறுமை, திருமண உறவு, குடும்பம் என எல்லாவற்றோடும் இணைந்து வாழ்ந்த பெண்கள் தனித்திறன் பெற்றவர்களாக விளங்கியதால் நவீன இலக்கியங்களின் ஆணிவேர்களாக மாறினர். மக்களின் வாழ்வியலைக் கூறுமிடத்து, ஆடவரும் மகளிரும் இணைந்து வாழ்ந்த வாழ்வியலில் மகளிருக்கான இடம் அவர்களின் ஆளுமை எப்படி இருந்தது என்பதை இக்கட்டுரை ஆய்கிறது.

எழில்வரதன் வாழ்வும் படைப்பும்

இன்றைய சமுதாயத்தில் எத்தனையோ எழுத்தாளர்கள் தினந்தோறும் தோன்றிக் கொண்டிருப்பதாலும் தனக்கென்று

தனித்துவமான மொழிநடையும், கனமான கணங்களையும் புன்முறுவலோடு கடந்து செல்கிற வாழ்க்கையை காட்டுகிற இவரது கதைகளும் தான் சாதனைகளுக்கும், காரணிகளாக அமைகின்றன. மேலும், இவர் பரிந்துரைகளோ, பரிவட்டங்களோ இல்லாமல் இலக்கிய உலகில் நுழைந்து உலா வந்தவர் எழில் வரதன். தர்மபுரி மாவட்டம், லளிகம் கிராமத்துக்காரர். இயற்பெயர் வரதராஜன். பிழைப்புக்காக கிராமம் விட்டு நகரம் நகர்ந்த மனுசன். தற்போது குடும்பத்தோடு ஓசூரில் வசித்து வருகிறார். இதுவரை ஏழு சிறுகதைத் தொகுப்புகளும், ஒரு நாவலும், ஒரு கவிதைத் தொகுப்பும் படைத்துள்ளார். வாழ்வின் நிறை, குறைகளையும், இயற்கையோடு இயைந்த மன உணர்வுகளையும், மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளையும் தனது படைப்பின் மூலமாக வெளிக் கொணரும் கவிஞனுக்கு தமிழக அரசு விருது, சன் குடும்ப விருது, திருப்புர் தமிழ்ச்சங்க விருது போன்ற பல விருதுகளை பெற்றுள்ள எழில் வரதன் தொடர்ந்து சிறுகதைகள் எழுதி வருகிறார்.

இலக்கியமும் உளவியலும்

இலக்கியமும் உளவியலும் மனித நடத்தையை ஆராயும் நெருங்கிய அறிவுத் துறையாகும். இலக்கியப்படைப்புகளில்வரும் கதாபாத்திரங்களின் உணர்வுகள், எண்ணங்கள் மற்றும் எழுத்தாளரின் மனநிலை ஆகியவற்றை உளவியல் கொள்கைகள் மூலம் பகுப்பாய்வு செய்வது இலக்கிய உளவியலாகும். ஆண் - பெண் இருவரின் நனவு மனம் , நனவிலி மனம் ஆகிய இரண்டிற்கிடையே உள்ள உறவினைக் கொண்டு ஆளுமையையும், பண்பையும் தீர்மானிக்கிறது. நனவிலியில் பதிந்துள்ள மறக்கப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட எண்ணங்களும், அனுபவங்களும், பண்பாட்டு விழுமியங்களும் பெண்ணின் ஆளுமையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஆளுமை - விளக்கம்

ஆங்கிலத்தில் ஆளுமையைக் குறிக்கும் "பர்ஸனாலிடி" என்னும் சொல், இலத்தீன் மொழியிலுள்ள "பர்ஸொனா" என்ற சொல்லிலிருந்து பிறந்தது. ஆளுமையைக் குறிக்கும் "பர்ஸனாலிடி" என்ற ஆங்கிலச் சொல்லின் பண்டைப் பொருள். உளவியலில் ஆளுமை என்னும் சொல் மிகப் பரந்த பொருளுடையது. ஒவ்வொரு தனிமனிதனிடமும், அவன் சமூகத்தில் எந்த நிலையிலிருப்பினும், ஆளுமையானது காணப்படுகிறது. ஆளுமை பற்றி கில்போர்ட், "ஆளுமையானது ஒருவரது பண்புகளின் தனித்தன்மை வாய்ந்த அமைப்பு" என்கிறார். (உளவியல், ப-338) மேலும், "ஒரு மனிதன் தன் பாரம்பரியத்தினாலும், சுழ்நிலையினாலும் பெற்றுள்ள உள்ளார்ந்த மனப்போக்குகள், உளத்துடிப்புகள், செய்முறைகள், உடல் வேட்கைகள் மற்றும் இயல்பூக்கங்கள் ஆகியவற்றின் தொகுப்பே அவனது ஆளுமையாகும்" என உட்வொர்த் கூறுகிறார். (உளவியல், ப-338)

பெண்ணியமும் ஆளுமையும்

பெண்ணியமும் ஆளுமையும் என்பவை பெண்களின் தனித்துவம், உரிமை மற்றும் சமூக ஆதிக்கத்தை வலியுறுத்தும் கொள்கையாகும். கல்வியறிவு, காதல் மற்றும் முடிவெடுக்கும் உரிமைகள் மூலம் பெண்கள் தங்கள் ஆளுமையை வளர்த்து ,வீட்டிலும் நாட்டிலும் தலைவராக உயர்ந்திருக்கின்றனர். வீரமங்கைகள், நவீன கவிஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வழியாக பெண்ணியம் தனிமனித ஆளுமையின் அடையாளமாகத் திகழ்கிறது. இதனையே, "பெண்ணின் ஆளுமை என்பது, ஆணிய ஆண் ஆதிக்கப் பண்பாட்டின் வெளிப்பாடாக இருப்பதால், ஆணாதிக்கக் கருத்துருவத்தை (ideology of male dominance) உள்முகமாக ஏற்றிருக்கிறது" என்பதை அரங்க மல்லிகா சுட்டிக் காட்டியுள்ளார். (தமிழ் இலக்கியமும், பெண்ணியமும், ப- 72) பெண்ணின்

ஆளுமையாக தன்னம்பிக்கை, வறுமை, குடும்பம், திருமண உறவு, ஆணின் வாழ்வை செதுக்கும் பெண் மூலமாக ஆளுமை வெளிப்படுவதைப் பின்வரும் கட்டுரையில் காண்போம்.

தன்னம்பிக்கையுள்ள பெண்

பெண்கள் பேதைகளாய், வாயில்லாப் புச்சிகளாய் மாதர் ஆண்களின் ஆதிக்கத்திற்கு அடங்கிக் கிடந்த நிலை மாறி பெண்களுக்கும், சமுதாயத்தில் உரிய பங்கும், மதிப்பும் கிடைக்க வேண்டும் என்ற உணர்வு இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து தான் நம் நாட்டில் தோன்றி வலுப்பெற்றது. தங்களுக்கென்று உரிமைகள் உண்டு, தாங்களே சுதந்திரமாக செயல்படும் ஆற்றல் தங்களிடமும் இருக்கிறது என்ற தன்னம்பிக்கையைப் பெண் சமூகம் உணர ஆரம்பித்துவிட்டது. தன்னம்பிக்கையைப் பற்றி கூறுகையில்,

"பெண்ணே எழுந்து நில்
வானம் குனியும்
பெண்ணே கைதட்டி அழை
வாழ்வு கைகட்டி நிற்கும்"

(பெண்ணியம் பேசுகிறேன், ப- 105)

இப்பாடலில் நீ தன்னம்பிக்கையோடு நிமிர்ந்து நின்றால் எட்டாத உயரத்தில் இருக்கும் வானம் கூட உனக்கு முன்னால் தலை வணங்கும் என்பதை ஜெ.செல்வகுமாரி எடுத்துரைக்கிறார். வறுமைப் பிடியில் இருக்கும் பெண்ணின் மனக்குமுறலின் ஆளுமை வெளிப்படுவதை கவிஞன்,

"பசித்திருக்கும் சிறு பிள்ளைக்கென
கத்தரிக்காய் காம்பில்
கண்ணீர்போல் ஒரு திரவம்
அடர்த்தியற்று மெல்லக் கசியும்"

(யாது நான் இங்கு, ப-101)

பெண்ணானவள் வறுமையின் காரணமாகப் பொருட்களை விற்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் பெண் தன் பிள்ளைகளுக்காக உழைக்கிறாள். காய் கனிளை வாங்கக்கூடிய வாடிக்கையாளர்கள் காய்களைப் பிஞ்சு என்றும் முற்றல் என்றும் அமுக்கிப் பார்த்து வசைப் பாடிவிட்டுச் செல்வார்கள். விற்க முடியாமல் போன காய்கறிகள் கூட பசியால் வாடும் ஏழைப் பிள்ளைகளைக் கண்டு கண்ணீர் வடிப்பது போன்ற உணர்வை வெளிப்படுத்துகிறது. பெண்ணானவள் சொத்தையான சொற்களையும், அவமானங்களையும் தன் பிள்ளைகளுக்காக தாங்கிக் கொள்ளும் தன்னம்பிக்கையுள்ள பெண்ணாக இருப்பதை வெளிப்படுத்துகிறார்.

மனிதனாக மாற்றும் பெண்

மனிதனை பண்படுத்தி, அன்பாலும் பொறுமையாலும் நற்பண்புகள் மிக்கவனாக மாற்றும் பெண்ணானவள், குடும்பத்தின் அச்சாணியாகவும், சமுகத்தின் அறக் காவலராகவும் திகழ்கிறாள். தன் சுயநலங்களை விடுத்து, அர்ப்பணிப்பு உணர்வுடன் குடும்ப மேம்பாட்டிற்கு உழைக்கும் அவள், அன்பான தாயாக, அன்பு மனைவியாக, வழிகாட்டும் பெண்ணாக மனித உறவுகளை நிலை நிறுத்துவதை,

"அவதாரங்கள்
அடுப்படிக் கரியிலும்
ஜனித்திருக்கக் கூடுமென்று
உன் வயிற்றின் தொப்புள் கொடி
கர்ப்பத்தின் ஆதியை உறிஞ்சி
என்னை சமைத்துக் காண்பித்தது"

(யாது நான் இங்கு, ப-41)

வறுமையின் பிடியில் வாழும் ஒரு தாய் தன் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். வசதி வாய்ப்புகள் இல்லாத மிகவும் ஏழ்மையான சுழலில் அந்த குழந்தை உருவாகியிருப்பதையும், தாயின் வறுமையால் உடலானது தளர்ந்து போயிருப்பதையும், செல்வந்தர்கள் தங்கள் குழந்தைகளுக்கு எதையெல்லாம் முழுமையாகக் கொடுக்கிறார்களோ அதற்கும் மேலான அன்பையும், கவனிப்பையும் ஏழைத் தாய் தன் குழந்தைக்கு கொடுத்து முழுமையான மனிதனாக மாற்றி, ஏழ்மையான வீட்டிலும் உன்னதமான உயிர்கள் பிறக்க முடியும் என்பதையும் தன் வறுமை நிலையிலும் பிள்ளைகளை முழுமையான மனிதனாக

மாற்றும் பெண்ணின் ஆளுமைப் பண்பையும் சுட்டிக்காட்டியுள்ளார். "குழந்தையின் பிறப்பு வரிசை நிலையும் (Birth Order) ஒருவரது ஆளுமையை உருவாக்கும் காரணியாக ஆட்லர் குறிப்பிடுகிறார். (உளவியல், ப -357)

வாழ்க்கையை நகர்த்தும் பெண்

மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவன் தனித்து வாழும் இயல்பினன் அல்ல. கூடி வாழும் தன்மையினால், அதை நிகழச் செய்வது திருமணம் என்ற உறவு முறையே, "சாஸ்திரம் சம்பிரதாயம் என்ற வட்டத்திற்குள் அவர்களைதள்ளிவிட்டது.சம்பிரதாயங்களின் பெயரில் எந்த பெண்ணும் திருமணம் என்ற பந்தத்தின் கீழ் அடங்கி வாழும் நிலை உருவாகியுள்ளது." (பெண்களும் சமூகமும், ப-4) என்று ஜெய் குமார் வலியுறுத்துகிறார். சமூகச் சடங்குகளால் பிணைக்கப்பட்ட பெண்ணின் மனப்போராட்டத்தை,

"இது இணைக் கூடும்
காலமல்ல சம்பிரதாயத் தொடக்கம்"

(யாது நான் இங்கு, ப-48)

இரு மனங்களின் ஆழமான விருப்பத்தால் நிகழ்வதை விட, ஜோதிடம் மற்றும் கலாச்சாரம் இட்ட முடிச்சுகள் யாராலும் அவிழ்க்க முடியாத அளவுக்கு இறுகி விட்டதை காணமுடிகிறது. சம்பிரதாயத்தில் தனக்கு விருப்பம் இருக்கிறதோ இல்லையோ சம்பிரதாயம் என்ற பெயரில் பெண்ணானவள் தள்ளப்படுகிறாள். எனினும், வாழ்க்கை தனக்கு தேவை என்பதை உணர்ந்து வாழ்க்கையைப் பொறுமையாக நகர்த்தும் பெண்ணின் வாழ்வியல் ஆளுமை உணர்வை எடுத்துரைக்கிறார்.

ஆணின் வாழ்வை செதுக்கும் பெண்

பெண் என்பவள் ஆணின் வாழ்க்கையில் ஒரு உன்னதமான பாத்திரமாக இருந்து, அன்பாலும் அர்ப்பணிப்பாலும் அவரது வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக செதுக்குகிறார். அன்னையாக, மனைவியாக எனபல பல்வேறு வடிவங்களில், நிபந்தனையற்ற அன்பும், ஆதரவும் மற்றும் ஊக்கமும் அறிந்து, ஆண்களை சரியான பாதையில் வழி நடத்துவதில் பெண்களின் பங்களிப்பு சிறப்பானது. "பெண்கள் இனி புதுயுகம் படைத்து புதிய வாழ்க்கை மேற்கொள்ள வேண்டும் எனில் முதலில் தம்மையும், பின் தான் வாழும் குடும்பம் மற்றும் சமுதாயத்தையும் வெல்லும் திறன் பெற்றவர்களாகத் தம்மை உருவாக்கிக் கொள்ள முன்வர வேண்டும்" (பெண்ணிய இலக்கியப் பதிவுகள், ப-24) என்பதை அம்பை எழுத்தாளர் சுட்டிக்காட்டியுள்ளார். ஒரு பெண்ணின் வருகையால் ஒரு ஆணின் வாழ்வில் ஏற்படும் ஆழமான மாற்றங்களை பெண்ணானவள் எடுத்துரைப்பதை,

"என் பருவத்துக் காட்டாறை
அணை போட்டு
வயலுக்குத் திருப்பியவள் நீதான் விளைந்திருக்கும்
தானியங்கள் உன்னுடையது"

(யாது நான் இங்கு , ப-95)

"மந்திர கட்டுக்காரி" என்ற கவிதையில் இலக்கற்றுக் கிடந்த ஒரு காற்றைப் போல இருந்தவனின் வாழ்வில், அந்தப் பெண் நுழைந்த பிறகு தான் அவனுக்கு ஒரு அர்த்தம் கிடைப்பதாகவும், பெண் தன் காதலையும், அதன் மூலம் உருவான பெரிய புதிய உயிரையும் இந்த உலகிற்கு பரிசளித்திருப்பதையும் இன்று அவன் வாழ்வில் காணும் முன்னேற்றம் அனைத்தும் அவளால் விளைந்தவையே. ஒரு பெண்ணை வெறும் தேவதையாகப் பார்க்காமல், ஒருவனின் வாழ்வைச் செதுக்கும் கலைஞராகவும், விவசாயியாகவும், தாயாகவும் போற்றதற்குரிய அவள் அவனது வெறும் இருப்பிற்கு ஒரு முழுமையான வடிவத்தைக் கொடுப்பதன் மூலம் பெண்ணின் ஆளுமை வெளிப்படுவதை ஆசிரியர்உணர்த்தியுள்ளார்.

ஆணாதிக்க ஆளுமையை மாற்றும் பெண்

ஆணின் மனம் பெண்ணைப் பாலியல் சார்ந்த உடல் வேட்கையில் தன் கூட்டுக்குள் அடக்கி ஆளவும், மற்ற செயல்களில் முன்னுரிமை தேடும் ஆணினம் பாலியல்

சார்ந்த சமூக அமைப்பில் பெண்ணைச் சார்ந்தே இருக்கிறான். எந்தக் காரியத்திலும் தன் சுயநலமே முதன்மையாக இருக்கும் படி பார்த்துக் கொண்டது ஆண் சமூகம். ''ஆண் ஆதிக்க கருத்துருவங்கள் ஆணின் உளவியலைப் பாதிப்பதைக் காட்டிலும் பெண்ணின் உளவியல் மீது அதிக ஆதிக்கம் செலுத்துவதை ஆட்லர் என்னும் உளவியலாளர். உயர்வு மனப்பான்மையின் சிறப்பை வலியுறுத்துகிறார்.'' மேலும், ''தாழ்வுச் சிக்கல் மனிதனின் ஆளுமையின் சமூக உறவுகளையும் பெருமளவு பாதிக்கிறது. ஒருவனது ஆளுமை வளர்ச்சியால் அடிப்படை இயல் பூக்கங்களைக் காட்டிலும் சமூக உந்துகளின் செல்வாக்கு மிகுந்துகாணப்படுகின்றது'' என்றுகூறுகிறார். (உளவியல் இ ப- 356) எழில் வரதன் எழுதிய ''காதலில் தின்னும் வேட்கை'' என்ற கவிதையில் காதலின் மென்மையான பக்கத்தைப் பேசாமல், காதலில் இருக்கும் ஒருவித தீவிரமான, ஆதிக்கமான அல்லது ''வேட்டை'' போன்ற உணர்வை வெளிப்படுத்துவதை,

''இரு கம்பிகளுக்கிடையே வலைபின்னி
நடுவில் நான் சிலந்தியாய் இருக்கிறேன்
நீ புச்சியாய் பிறக்காதே
இல்லை
நான் இருக்கும் பக்கம் வராதே''

(யாது நான் இங்கு, ப-92)

என்ற கவிதையில் இத்தனை வாய்ப்புகள் கிடைத்தும், இத்தனை தீவிரமான வேட்கை இருந்தும், இன்னும் நீ முழுமையாக எனக்குள் அடங்கவில்லை என்ற ஆதங்கத்தோடு காதலன் கூறுவதையும், தன் காதலன் பலவீனமான புச்சியாக சிக்கி அழிந்து விடக்கூடாது என்ற எச்சரிக்கையையும் விடுக்கிறாள். மேலும்,

''பல சந்தர்ப்பங்கள் வாய்த்ததே
ஒரு முறையும் என் உணவில் நீ''

(யாது நான் இங்கு, ப-92)

எனகாதல் ஒரு மிருகத்தனமான வேட்கையாக மாறுவதையும், காதலன் காதலை ஒரு வேட்டையாகவும், காதலியை ஒரு வேட்டைக்காரியாகவும் உருவகப்படுத்துவதன் மூலம், காதலில் இருக்கும் உக்கிரத்தையும், ஆதிக்கத்தையும் எதிர்ப்பதை பெண்ணாளுமை வெளிப்பாடாக அமைவதை எழில் வரதன் அழகாகப் படம் பிடித்துக்காட்டுகிறார்.

முடிவுரை

பெண்களைப் புதுயுகம் படைக்க வேண்டும் என்ற உணர்வு மேலோங்கி இருப்பதை கவிஞன் புலப்படுத்துகிறார். குடும்பத்தை நடத்திச் செல்வதும், குழந்தைகளைப் பெற்றெடுப்பதும், உடைமைகளைப் பாதுகாப்பதும் பெண்ணின் கடமையாக இருப்பதால் பொது வாழ்விலிருந்தும் சமூக கடமைகளிலிருந்தும் ஒதுக்கப்பட்டு வீட்டிற்குள் அடைபட்டு விடுகிறார்கள். தனி மனிதனும் பெண்ணும் விடுவிக்கப்படும்போது தான் சமூகம் வளர்ச்சி பெறுகிறது. அதன் அடிப்படையில் இருந்து தான் பெண்ணின் தனித்துவம் மலர வேண்டும் என்ற பெண்ணியக் கருத்தாக்கமும், ஆளுமையும் விதைக்கப்பட்டுள்ளதை எழில்வரதன் எழுதிய ''யாது நான் இங்கு'' என்ற கவிதைத் தொகுப்பின் வாயிலாக காண முடிகிறது.

துணை நூற்பட்டியல்

1. எழில் வரதன், யாது நான் இங்கு, முதற் பதிப்பு: செப்டம்பர் 2005, சந்தியா பதிப்பகம்,ஃப்ளாட் ஏ, நியுடெக் வைபவ், 57-53 ஆவது தெரு, அசோக் நகர், சென்னை.
2. முனைவர். அரங்க மல்லிகா ,தமிழ் இலக்கியமும், பெண்ணியமும், முதற்பதிப்பு: நவம்பர் 2002, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட் , 41-பி சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ,சென்னை.
3. ஜெ. செல்வகுமாரி, பெண்ணியம் பேசுகிறேன், பதிப்பு: செப்டம்பர் 2005, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41- பி சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை.
4. கி. நாகராஜன், கற்றல் மனித வளர்ச்சி தொடர்பான உளவியல், முதற்பதிப்பு: மே

2009, ராம் பதிப்பகம், பிளாட் எண் பு 1, அபார்ட்மெண்ட்ஸ் 10, பாரதியார் தெரு, சென்னை.

5. மா. பத்ம பிரியா, பெண்ணிய இலக்கியப் பதிவுகள், முதற் பதிப்பு: ஜூலை 2010, பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட் ,142, ஜானி ஜானி கான் சாலை ,சென்னை.
6. அ. ஜெய்குமார், பெண்களும் சமூகமும், முதற்பதிப்பு: நவம்பர் 1991, உமா பதிப்பகம், 58 ஐயப்ப செட்டி தெரு, மண்ணடி, சென்னை.